Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.908/2025

**Depositions of PW- 2**

| Name | திரு.ரமேஷ் | Occupation | தலைமை காவலர் |
|---|---|---|---|
| Father’s name | அன்பழகன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th day of July 2026.

04.07.2026

எதிரி ஆஜரில்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது வத்திராயிருப்பு காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.03.2025 அன்று 08.00 மணிக்கு திருவில்லிபுத்தூர் அமலாக்க பிரிவு சார்பு ஆய்வாளர் கண்ணன் அவர்களுடன் நானும் தகா 1659 பாலமுருகன் போலீஸ்பார்ட்டிகளாகிய நாங்கள் திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலைய சராக பகுதிகளில் மதுவிலக்கு சம்மந்தமாக ரோந்து செய்து கண்காணித்து வந்தபோது கிடைத்த ரகசிய தகவலை பெற்று பிள்ளையார்நத்தம் அருகில் பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த மங்காபுரம் வடக்குதெருவை சேர்ந்த ராமர் த/பெ.செல்வராஜ் வயது 45 என்பவர் அவரது கையில் சுமார் 5 லிட்டர் அளவுள்ள பிளாஸ்டிக் குடத்துடன் நின்றுகொண்டிருந்தவர் போலீஸ்பார்ட்டியாகிய எங்களை கண்டதும் ஓடஎத்தனித்தவரை தடுத்து நிறுத்தி கையில் வைத்திருந்த பிளாஸ்டிக் குடத்தை பார்த்தபோது சுமார் 2 லிட்டர் அளவுள்ள வெண்மை நிற திரவம் இருந்தது. அதை பற்றி கேட்டபோது பனங்கள் என்றும் விற்பனைக்கு வைத்திருப்பதாகவும் கூறினார். தமிழக அரசால் தடை செய்யப்பட்ட பனங்கள் வைத்திருந்த குற்றத்திற்கு எதிரியை அந்த இடத்தில் வைத்து கைது செய்து பிளாஸ்டிக் குடத்தில் இருந்த பனங்கள்ளை காவல் ஆய்வாளரின் உத்தரவின் பிரகாரம் மண்ணில் கொட்டி அழித்தும் பிளாஸ்டிக் குடத்தை

உடைத்தும் எதிரியை நிலையம் கொண்டு போக தயாரிக்கலான அத்தாட்சியில் கையொப்பமிட அந்த இடத்தில் தனிநபர்கள் யாரும் இல்லாததால் போலீஸ்பார்ட்டிகளாகிய நாங்களே கையெழுத்து செய்தோம். பின்னர் நிலையம் வந்து எதிரி மீது நிலைய குற்ற எண்.21/2025 பிரிவு.4(1)(C) TNP amendment Act ன் கீழ் வழக்கு பதிவு செய்ய சிறப்பு சார்பு ஆய்வாளர் அவர்களுக்கு உதவியாக இருந்தோம். என்னிடம் காட்டப்படும் அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள அத்தாட்சியிலுள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

இவ்வழக்கு சம்பந்தமாக ரோந்து பணிக்கு திருவில்லிபுத்தூர் மதுவிலக்கு காவல்நிலையத்திலிருந்து தான் நாங்கள் புறப்பட்டு சென்றோம் என்றால் சரிதான். காவல் நிலையத்திலிருந்து மேற்படி பிள்ளையார்நத்தம் காவல் நிலையத்திலிருந்து 6 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது என்றால் சரிதான். பிள்ளையார்நத்தம் உள்ள பகுதிகளில் 1000 த்திற்கும் மேற்பட்ட பனைமரங்கள் உள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கின் எதிரி குறிப்பாக எந்த மரத்திலிருந்து பனங்கள் இறக்கினார் என்பது குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் சம்பவம் நடந்ததாக கூறப்படும் மரத்தினை குறிப்பிட்டு வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். எதிரியிடமிருந்து பனைமரம் ஏற பயன்படுத்தும் கருவிகளான அருவாள், கால்தலை, போன்ற உபகரணங்கள் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். பனங்கள்ளை கண்டுபிடிப்பதற்காக சிறப்பு பயிற்சிகள் எதுவும் நான் படிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி நாங்கள் கைப்பற்றியதாக கூறப்படும் குடத்தினை புகைப்படம் எடுக்கப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் சொத்துக்களை அழிப்பதற்கு எங்களுக்கு அதிகாரம் இல்லை என்றால் காவல் ஆய்வாளர் சொன்னதன் பேரில் அழித்தோம். இவ்வழக்கின் அத்தாட்சி, முதல் தகவல் அறிக்கை மற்றும் எனது BNSS பிரிவு 180(3) வாக்குமூலத்திலும் காவல் ஆய்வாளர் சொன்னதன் பேரில் மேற்படி கைப்பற்றப்பட்ட பொருட்களை அழித்தாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. ஆய்வாளர் உத்தரவின்பேரில் அழித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி கைப்பற்றப்பட்டதாக கூறப்படும்பொருட்களை அழிப்பதற்கு முன் நீதிமன்றத்தில் அனுமதி எதுவும் பெறப்படவில்லை என்றால் சரிதான். எதிரியை கைது செய்த போது பனங்கள்

இறக்கியதாக அவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறப்படவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியில் தனிநபரிடம் கையெழுத்து பெறாமல், போலீஸ் பார்ட்டிகளாகிய நாங்களே சாட்சிகளாக கையெழுத்து செய்துள்ளோம் என்றால் சரிதான். தனிநபர் சாட்சிகள் யாரும் கையெழுத்து செய்ய முன்வராததால் நாங்களே கையெழுத்து செய்தோம். மேற்படி சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடமானது ஆட்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். உண்மையில் சம்பவயிடத்தில் வைத்து எதிரியிடம் மேற்படி பொருட்களை கைப்பற்றியிருந்தோம் என்றால் தனிநபர் சாட்சிகளிடம் கையெழுத்து பெற்றிருப்போம் என்றால் சரியல்ல. மேற்படி நாங்கள் அழைத்தபோது முன்வராத தனிநபர்களின் விவரங்கள் பற்றி ஆய்வாளர் என்னை விசாரித்தபோது நான் கூறவில்லை என்றால் சரிதான். எதிரியை சோதனை செய்வதற்கு முன் நீதிமன்றத்திலோ அல்லது எங்களது மேல் அதிகாரிகளிடமோ எந்தவித உத்தரவும் பெறப்படவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் இருந்து பனங்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. கைப்பற்றி சம்பவயிடத்திலேயே அழித்துவிட்டோம். இவ்வழக்கில் அழித்தல் மகஜர் தயார் செய்தோமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி 2 லிட்டர் பனங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் காவல் ஆய்வாளரின் உத்தரவின்படி சம்பவ இடத்திலேயே கொட்டி அழித்துவிட்டோம். தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தின் படி மேற்படி பனங்களை அழிப்பதற்கு எங்களுக்கு அதிகாரம் இல்லை என்றால், காவல் ஆய்வாளர் கூறியதன் பேரில் தான் அழித்தோம். காவல் ஆய்வாளரிடமிருந்து எழுத்து மூலமாக உத்தரவு எதுவும் நான் பெறவில்லை என்றால் சரிதான் வாய்மொழியாத்தான் உத்தரவு பெறப்பட்டது. உண்மையில் எதிரியிடமிருந்து பனங்கள்ளை கைப்பற்றியிருந்தால், அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்போம் என்றாலும், அவ்வாறு கைப்பற்றப்படாததால் தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிரி மீது புள்ளி விபரத்திற்காக இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. சிறப்பு சார்பு ஆய்வாளருக்கு மேற்படி பொருட்களை கைப்பற்றுவதற்கோ அழிப்பதற்கோ எந்தவித அதிகாரமும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி அத்தாட்சியானது காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.

Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.908/2025

**Depositions of PW- 3**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.பாலமுருகன் | Occupation | தலைமை காவலர் |
| Father's name | முனியசாமி | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th day of July 2026.

04.07.2026

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

முதல் விசாரணை

நான் தற்போது திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.03.2025 அன்று 08.00 மணிக்கு திருவில்லிபுத்தூர் அமலாக்க பிரிவு சார்பு ஆய்வாளர் கண்ணன் அவர்களுடன் நானும் தகா 1034 ரமேஷ் போலீஸ்பார்ட்டிகளாகிய நாங்கள் திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலைய சராக பகுதிகளில் மதுவிலக்கு சம்மந்தமாக ரோந்து செய்து கண்காணித்து வந்தபோது கிடைத்த ரகசிய தகவலை பெற்று பிள்ளையார்நத்தம் அருகில் பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த மங்காபுரம் வடக்குதெருவை சேர்ந்த ராமர் த/பெ.செல்வராஜ் வயது 45 என்பவர் அவரது கையில் சுமார் 5 லிட்டர் அளவுள்ள பிளாஸ்டிக் குடத்துடன் நின்றுகொண்டிருந்தவர் போலீஸ்பார்ட்டியாகிய எங்களை கண்டதும் ஓடஎத்தனித்தவரை தடுத்து நிறுத்தி கையில் வைத்திருந்த பிளாஸ்டிக் குடத்தை பார்த்தபோது சுமார் 2 லிட்டர் அளவுள்ள வெண்மை நிற திரவம் இருந்தது. அதை பற்றி கேட்டபோது பனங்கள் என்றும் விற்பனைக்கு வைத்திருப்பதாகவும் கூறினார். தமிழக அரசால் தடை செய்யப்பட்ட பனங்கள் வைத்திருந்த குற்றத்திற்கு எதிரியை அந்த இடத்தில் வைத்து கைது செய்து பிளாஸ்டிக் குடத்தில் இருந்த பனங்கள்ளை காவல் ஆய்வாளரின் உத்தரவின் பிரகாரம் மண்ணில் கொட்டி அழித்தும் பிளாஸ்டிக் குடத்தை

உடைத்தும் எதிரியை நிலையம் கொண்டு போக தயாரிக்கலான அத்தாட்சியில் கையொப்பமிட அந்த இடத்தில் தனிநபர்கள் யாரும் இல்லாததால் போலீஸ்பார்ட்டிகளாகிய நாங்களே கையெழுத்து செய்தோம். பின்னர் நிலையம் வந்து எதிரி மீது நிலைய குற்ற எண்.21/2025 பிரிவு.4(1)(C) TNP amendment Act ன் கீழ் வழக்கு பதிவு செய்ய சிறப்பு சார்பு ஆய்வாளர் அவர்களுக்கு உதவியாக இருந்தோம். என்னிடம் காட்டப்படும் அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள அத்தாட்சியிலுள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

இவ்வழக்கு சம்பந்தமாக ரோந்து பணிக்கு திருவில்லிபுத்தூர் மதுவிலக்கு காவல்நிலையத்திலிருந்து தான் நாங்கள் புறப்பட்டு சென்றோம் என்றால் சரிதான். காவல் நிலையத்திலிருந்து மேற்படி பிள்ளையார்நத்தம் காவல் நிலையத்திலிருந்து 6 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது என்றால் சரிதான். பிள்ளையார்நத்தம் உள்ள பகுதிகளில் 1000 த்திற்கும் மேற்பட்ட பனைமரங்கள் உள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கின் எதிரி குறிப்பாக எந்த மரத்திலிருந்து பனங்கள் இறக்கினார் என்பது குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் சம்பவம் நடந்ததாக கூறப்படும் மரத்தினை குறிப்பிட்டு வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். எதிரியிடமிருந்து பனைமரம் ஏற பயன்படுத்தும் கருவிகளான அருவாள், கால்தலை, போன்ற உபகரணங்கள் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். பனங்கள்ளை கண்டுபிடிப்பதற்காக சிறப்பு பயிற்சிகள் எதுவும் நான் படிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி நாங்கள் கைப்பற்றியதாக கூறப்படும் குடத்தினை புகைப்படம் எடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. சம்பவயிடத்தில் வைத்து புகைப்படம் எடுத்தோம். மேற்படி கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் சொத்துக்களை அழிப்பதற்கு எங்களுக்கு அதிகாரம் இல்லை என்றால் காவல் ஆய்வாளர் சொன்னதன் பேரில் அழித்தோம். இவ்வழக்கின் அத்தாட்சி, முதல் தகவல் அறிக்கை மற்றும் எனது BNSS பிரிவு 180(3) வாக்குமூலத்திலும் காவல் ஆய்வாளர் சொன்னதன் பேரில் மேற்படி கைப்பற்றப்பட்ட பொருட்களை அழித்தாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. ஆய்வாளர் உத்தரவின்பேரில் அழித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி கைப்பற்றப்பட்டதாக கூறப்படும்பொருட்களை அழிப்பதற்கு முன் நீதிமன்றத்தில் அனுமதி எதுவும் பெறப்படவில்லை என்றால்

சரிதான். எதிரியை கைது செய்த போது பனங்கள் இறக்கியதாக அவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறப்படவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியில் தனிநபரிடம் கையெழுத்து பெறாமல், போலீஸ் பார்ட்டிகளாகிய நாங்களே சாட்சிகளாக கையெழுத்து செய்துள்ளோம் என்றால் சரிதான். தனிநபர் சாட்சிகள் யாரும் கையெழுத்து செய்ய முன்வராததால் நாங்களே கையெழுத்து செய்தோம். மேற்படி சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடமானது ஆட்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரியல்ல. உண்மையில் சம்பவயிடத்தில் வைத்து எதிரியிடம் மேற்படி பொருட்களை கைப்பற்றியிருந்தோம் என்றால் தனிநபர் சாட்சிகளிடம் கையெழுத்து பெற்றிருப்போம் என்றால் சரியல்ல. மேற்படி நாங்கள் அழைத்தபோது முன்வராத தனிநபர்களின் விவரங்கள் பற்றி ஆய்வாளர் என்னை விசாரித்தபோது நான் கூறவில்லை என்றால் சரிதான். எதிரியை சோதனை செய்வதற்கு முன் நீதிமன்றத்திலோ அல்லது எங்களது மேல் அதிகாரிகளிடமோ எந்தவித உத்தரவும் பெறப்படவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் இருந்து பனங்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. கைப்பற்றி சம்பவயிடத்திலேயே அழித்துவிட்டோம். இவ்வழக்கில் அழித்தல் மகஜர் தயார் செய்தோமா என்றால் இல்லை. மேற்படி 2 லிட்டர் பனங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் காவல் ஆய்வாளரின் உத்தரவின்படி சம்பவ இடத்திலேயே கொட்டி அழித்துவிட்டோம். தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தின் படி மேற்படி பனங்களை அழிப்பதற்கு எங்களுக்கு அதிகாரம் இல்லை என்றால், காவல் ஆய்வாளர் கூறியதன் பேரில் தான் அழித்தோம். காவல் ஆய்வாளரிடமிருந்து எழுத்து மூலமாக உத்தரவு எதுவும் நான் பெறவில்லை என்றால் சரிதான் வாய்மொழியாத்தான் உத்தரவு பெறப்பட்டது. உண்மையில் எதிரியிடமிருந்து பனங்கள்ளை கைப்பற்றியிருந்தால், அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்போம் என்றாலும், அவ்வாறு கைப்பற்றப்படாததால் தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிரி மீது புள்ளி விபரத்திற்காக இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. சிறப்பு சார்பு ஆய்வாளருக்கு மேற்படி பொருட்களை கைப்பற்றுவதற்கோ அழிப்பதற்கோ எந்தவித அதிகாரமும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி அத்தாட்சியானது காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.